[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 ஜூன் 1

*3) தமிழ்நாட்டில் பர்கூர், கோயம்புத்தூர், காரைக்குடி, சேலம், திருநெல்வேலி மற்றும் வேலூரில் உள்ள 6 அரசு பொறியியல் கல்லூரிகளிலுள்ள அரசு விடுதிகளில் தலா 150 மாணாக்கர்கள் தங்குவதற்கு ஏதுவாக 3 நபர்கள் தங்கும் வசதியுள்ள 50 அறைகள் கொண்ட விடுதிகள் 37 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11-05*

## (ஈ) கோவை மற்றும் திருச்சியில் தகவல் தொழில்நுட்பக் கட்டடங்கள் கட்டுதல், தமிழ்நாட்டிற்கான இணைய பாதுகாப்பு கட்டமைப்புத் திட்டம் செயல்படுத்துதல் மற்றும் எச்.டி. செட் டாப் பாக்ஸ் வாயிலாக டிஜிட்டல் கேபிள் டி.வி. சேவையினை மேம்படுத்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அளப்பரிய வளர்ச்சியினை அடைந்து இருக்கின்ற தகவல் தொழில்நுட்பத்தின்மூலம் பொது மக்களுக்கான சேவைகளை விரைந்து வழங்கி வருகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசு, அதனை முன்னெடுத்துச் செல்ல பல நடவடிக்கைகளை முனைப்புடன் எடுத்து வருகிறது.*

*அந்த வகையில், நடப்பாண்டில் செயல்படுத்தவுள்ள பின்வரும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிக்கின்றேன்.*

*1. தொழில் முனைவோர்களுக்கு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் அதனைச் சார்ந்த வணிகத்தைத் தொடங்க ஏதுவாக, கோயம்புத்தூர் மாவட்டம், விளாங்குறிச்சியில் உள்ள எல்கோசெஸ்ஸில் 2 இலட்சத்து 50 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் (மேசையைத் தட்டும் ஒலி) மற்றும் திருச்சியில் ஒரு இலட்சம் சதுர அடி பரப்பளவில் 40 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், இரண்டு தகவல் தொழில்நுட்பக் கட்டடங்கள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

*2018 ஜூன் 1]* [*திரு. எடப்பாடி கே. பழனிசாமி*]

*2. தமிழ்நாடு அரசின் தகவல் தொழில்நுட்பவியல் உட்கட்டமைப்புகளான* TNSWAN, TNSDC *மற்றும் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படும் மின் ஆளுமை சேவைகளை இணைய அச்சுறுத்தல்கள் மற்றும் தடைகளிலிருந்து கண்காணித்து, தடங்கலற்ற மற்றும் பாதுகாப்பான இணைய சேவையினை வழங்கும் பொருட்டு “தமிழ்நாட்டிற்கான இணைய பாதுகாப்பு கட்டமைப்புத் திட்டம்” 21 கோடியே 39 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் எல்காட் நிறுவனம்மூலம் செயல்படுத்தப்படும். இதன்மூலம் தடையற்ற இணையவழி சேவைகள் மற்றும் அரசுத் துறைகளின் தரவுகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும்.*

*3. தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் அதன் சந்தாதாரர்களுக்கு தற்போது தரமான வரையறையில்* (SD-Standard Definition) *டிஜிட்டல் கேபிள் டி.வி. சேவையை வழங்கி வருகிறது. அதனை மேம்படுத்தும் விதமாக, உயர் வரையறை* (HD-High Definition) *தரத்தில் மிக துல்லியமான சேவை* “HD *செட் டாப் பாக்ஸ்” வாயிலாக வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

## (உ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் குரூப்–1 தேர்வுகளுக்கான வயது உச்ச வரம்பினை அதிகப்படுத்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை குறித்த அறிவிப்பினை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.*

*தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படுகின்ற குரூப்-1 பணியிடங்களுக்கான போட்டித் தேர்வுகளில் பங்குபெறுவதற்கான வயது உச்சவரம்பினை உயர்த்திடுமாறு பல்வேறு தரப்பினரிடம் இருந்து அரசுக்குக் கோரிக்கைகள் வந்துள்ளன. அதன் அடிப்படையில், மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணைய தேர்வுகளுக்கு உள்ள வயது உச்சவரம்பினைப்போல, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் குரூப்-1,* 1-A, 1-B *பணியிடங்களுக்கு தற்போதுள்ள* SC/ST/MBC/BC & DNC